ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது
අංක 1980/28- 2016 අගෝස්තු මස 16 වැනි අඟහරුවාදා - 2016.08.16
1980/28 ஆம் இலக்கம் - 2016 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 16 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை
(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி III - காணிகள்

## காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழான அறிவித்தல்

எனது குறிப்பு இல.: J/78/LG/395.

பிரதேச செயலாளரின் குறிப்பு இல.:

இஅ/5/332.

ஒரு பகிரங்க தேவைக்கு வேண்டியதான கீழ்க் காணும் காணியை எடுத்துக் கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக் கிறார்கள் என்பதை 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தல் (திருத்தச்) சட்டத்தினால் திருத்தப்பட்ட வாறான காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட் பிரிவின் பிரகாரம் நான் இத்தால் அறிவிக்கின்றேன்.

**எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம்:**

தென் மாகாணம், காலி மாவட்டம், ஹிக்கடுவை பிரதேச அலுவலர் பிரிவில், இல. 2 வெல்லவத்தை மற்றும் இல. 03 வெல்லபட ஹிக்கடுவை பட்டிணசபை எல்லைக்குள் அமைந்துள்ள கிராம அலுவலர் பிரிவில் அமைந்துள்ள காலி மாவட்ட நில அளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்ட இல. சு. வ. ப. கா 2126 உம் 1987.07.07 ஆந் திகதியுடைய சுவடு வரைபடத்தில் காட்டப்பட்டுள்ள விஸ்தீரணத்தில் சுமார் 0.135 ஹெக்டயார் அளவுடைய கீழே விபரிக்கப்படும் 15 காணித்துண்டுகள் வருமாறு:

1. **துண்டிலக்கம்: 01**
காணியின் பெயர்: வெல்ல அட்தர மகவத்தை; உரிமை கோருவோர்: பீட்டர் அல்விஸ்; விஸ்தீரணம்: 0.004 ஹெக்டயார்.

2. **துண்டிலக்கம்: 02**
காணியின் பெயர்: குறுந்துவத்தை; உரிமை கோரு வோர்: அரசு; விஸ்தீரணம்: 0.003 ஹெக்டயார்.

3. **துண்டிலக்கம்: 03**
காணியின் பெயர்: வெல்ல அட்தர மகவத்தை மற்றும் மரதானெ கொக்கலவத்தை; உரிமை கோருவோர்: அரசு; விஸ்தீரணம்: 0.011 ஹெக்டயார்.

4. **துண்டிலக்கம்: 04**
காணியின் பெயர்: மரதானெ கொக்கலவத்தை; உரிமை கோருவோர்: அரசு; விஸ்தீரணம்: 0.004 ஹெக்டயார்.

5. **துண்டிலக்கம்: 05**
காணியின் பெயர்: மரதானெ கொக்கலவத்தை; உரிமை கோருவோர்: ஹிக்கடுவை குறுந்துவத்தையில் வதியும் எலன் கதரினா; விஸ்தீரணம்: 0.006 ஹெக்டயார்.

6. **துண்டிலக்கம்: 06**
காணியின் பெயர்: மரதானெ கொக்கலவத்தை மற்றும் அம்பகஹவத்தை; உரிமை கோருவோர்: அரசு; விஸ்தீரணம்: 0.004 ஹெக்டயார்.

7. **துண்டிலக்கம்: 07**
காணியின் பெயர்: மரதானெ கொக்கலவத்தை மற்றும் அம்பகஹவத்தை; உரிமை கோருவோர்: ஹிக்கடுவை குறுந்துவத்தையில் வதியும் எம். டப். செனவிரத்ன; விஸ்தீரணம்: 0.006 ஹெக்டயார்.

*இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

8. **துண்டிலக்கம்: 08**
காணியின் பெயர்: அம்பகஹமரதானவத்தை மற்றும் அம்பஹவத்தை; உரிமை கோருவோர்: ஹிக்கடுவை குறுந்து வத்தையில் வதியும் பீ. பண்டிதரத்ன; விஸ்தீரணம்: 0.006 ஹெக்டயார்.

9. **துண்டிலக்கம்: 09**
காணியின் பெயர்: அம்பகஹமரதானவத்தை; உரிமை கோருவோர்: ஷார்லிஸ் ஜயசூரிய மற்றும் பலர்; விஸ்தீரணம்: 0.001 ஹெக்டயார்.

10. **துண்டிலக்கம்: 10**
காணியின் பெயர்: அம்பகஹமரதானவத்தை; உரிமை கோருவோர்: ஹிக்கடுவை குறுந்துவத்தையில் வதியும் ஷார்லிஸ் ஜயசூரிய மற்றும் எஸ். செனவிரத்ன, எம். டப்ளிவ். செனவிரத்ன, ஏப்ரஹம் பண்டிதரத்ன மற்றும் எம். மஹலிட்தயும் மற்றும் ஹிக்கடுவை ஹெட்டிகொடையில் வதியும் லோரா அமரவீர குணவர்தன; விஸ்தீரணம்: 0.025 ஹெக்டயார்.

11. **துண்டிலக்கம்: 11**
காணியின் பெயர்: கஜ்ஜுகஹவத்தை, மரதானெவத்தை; உரிமை கோருவோர்: ஹிக்கடுவை குறுந்துவத்தையில் வதியும் எஸ். செனவிரத்ன. எம். டப்ளிவ். செனவிரத்ன, ஏப்ரஹம் பண்டிதரத்ன, ஜொஹானா பண்டிதரத்ன மற்றும் எம். மஹலிட்தயும் மற்றும் ஹிக்கடுவை ஹெட்டிகொடையில் வதியும் லோரா அமரவீர குணவர்தன; விஸ்தீரணம்: 0.004 ஹெக்டயார்.

12. **துண்டிலக்கம்: 12**
காணியின் பெயர்: வலவ்வத்தை; உரிமை கோருவோர்: ஹிக்கடுவை வலவ்வத்தையில் வதியும் ஸோமா ஜயவர்தன; விஸ்தீரணம்: 0.002 ஹெக்டயார்.

13. **துண்டிலக்கம்: 13**
காணியின் பெயர்: வலவ்வத்தை; உரிமை கோருவோர்: ஹிக்கடுவை வலவ்வத்தையில் வதியும் ஸோமா ஜயவர்தன; விஸ்தீரணம்: 0.0023 ஹெக்டயார்.

14. **துண்டிலக்கம்: 14**
காணியின் பெயர்: வலவ்வத்தை; உரிமை கோருவோர்: ஹிக்கடுவை வலவ்வத்தையில் வதியும் ஸோமா ஜயவர்தன; விஸ்தீரணம்: 0.006 ஹெக்டயார்.

15. **துண்டிலக்கம்: 15**
காணியின் பெயர்: வலவ்வத்தை; உரிமை கோருவோர்: அரசு; விஸ்தீரணம்: 0.029 ஹெக்டயார்.

மேற்குறித்த காணித் துண்டுகளுக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்து மூலம் அதிகாரமளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2016 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 21 ஆந் திகதி மு.ப. 9.30 மணிக்கு, ஹிக்கடுவை பிரதேச செயலகத்தில் என் முன்பாக வெளிப்படுத்தும் படியும்,

மேலும், அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நஷ்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும், நஷ்டஈட்டுத் தொகையையும், அத்தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும் 2016 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 14 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் இருபிரதிகளாக எனக்கு அறிவிக்கும் படியும் இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

தமயந்தி பரணகம,
பிரதேச செயலாளர்,
ஹிக்கடுவை.

பிரதேச செயலகம்,
ஹிக்கடுவை,
2016, யூன் 22.

9 - 76

---

## காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)

7 ஆம் பிரிவின் கீழான அறிவித்தல்

எனது குறிப்பு இல.: LAN/ACQU/POLKA/D31/03.
காணி மற்றும் காணி அபிவிருத்தி அமைச்சின் குறிப்பு
இல.: 4-3/4/2015/LO/187.

ஒரு பகிரங்க தேவைக்கு வேண்டியதான கீழ்க் காணும் காணியை எடுத்துக் கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதை 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தல் (திருத்தச்) சட்டத்தினால் திருத்தப்பட்ட வாறான காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட் பிரிவின் பிரகாரம் நான் இத்தால் அறிவிக்கின்றேன்.

**எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம்:**

கிழக்கு மாகாணம், மட்டக்களப்பு மாவட்டம், கோறளைப்பற்று பிரதேச அலுவலர் பிரிவில், கல்குடா 204 கிராம அலுவலர் பிரிவில் பட்டியடிச்சேனை கிராமத்தில் அமைந்துள்ளதும் நில அளவை மா அதிபரால் தயாரிக்கப் பட்ட வரைபட இலக்கம் PPMADA 2811 இல் 2.9078 ஹெக்டயார் விஸ்தீரணம் கொண்ட ஒரு காணித்துண்டு இதன் எல்லைகள் வருமாறு:

வடக்கு: வீதி (வீதி அபிவிருத்தி அதிகார சபை); கிழக்கு: வீதி (வீதி அபிவிருத்தி அதிகார சபை) TP 169428 அத்துடன் 304539; தெற்கு: TP 304539; மேற்கு: TP 304539 அத்துடன் 169428;

மேற்குறித்த காணித் துண்டுகளுக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்து மூலம் அதிகாரமளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2016 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 26 ஆந் திகதி மு.ப. 10.00 மணிக்கு, கோறளைப்பற்று பிரதேச செயலகத்தில் என்

முன்பாக வெளிப்படுத்தும்படியும், அக்காணியில் அவர்களுக் குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நஷ்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கை களின் விபரங்களையும், நஷ்டஈட்டுத் தொகையையும், அத்தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும் 2016 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 12 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் முப்பிரதிகளாக எனக்கு அறிவிக்கும்படியும் இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

வீ. வாசுதேவன்,
பிரதேச செயலாளர்,
கோறளைப்பற்று,
வாழைச்சேனை.

பிரதேச செயலகம்,
கோறளைப்பற்று
வாழைச்சேனை,
2016, ஓகத்து 10.

9 - 77

---

திருத்தம்

## 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்கக் காணி எடுத்தல் (திருத்தச்) சட்டப்படி திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)

குறிப்பு இல.: NIDS/LND5/ACQ/20.

சபரகமுவ மாகாணத்தில், இரத்தினபுரி மாவட்டத்தில், நிவித்திகல பிரதேச செயலகப் பிரிவில், நவதுன் கோரளையில் மெத பத்துவை சிறு பிரிவில், நிவித்திகல என்னும் கிராமத்தில் அமைந்துள்ள மு. கி. ப. 36 இஹல ரதாலியத்த, கஹங்கொட லியத்த, ரதாலியத்த அஸ்வெத்தும, மஹகும்புர அஸ்வெத்தும என்னும் காணித் துண்டுகள் பொதுத் தேவைக்காக நிவித்திகல பிரதேச சபைக்கு எடுத்துக் கொள்வதற்காக காணி எடுத்தற் சட்டத்தின் 7 ஆம் பிரிவின் கீழ் 1622/23 இலக்கமும் 2009/10/07 திகதியும் உடைய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அதி விசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட அறிவித்தலில் குறிப்பிடப் பட்டுள்ள காணி நில அளவையாளர் நாயகம் அவர்களால் ஒழுங்கு செய்யப்பட்ட மு. கி. ப. 36 இன் மேலதிக இல. 86 உடைய திட்டப்படத்தில் R/NVT/2008/62 ஆம் இலக்கமும் 2009/07/10 திகதியும் உடைய சுவடு வரைபடத்தில்" என்னும் பகுதியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக காணி நில அளவையாளர் நாயகம் அவர்களால் ஒழுங்கு செய்யப்பட்ட மு. கி. ப. 36 இன் தாள் இல. 79 மேலதிக இல. 86 உடைய திட்டப் படத்தில் துண்டு இலக்கங்கள் 1234, 1235, 1236, 1237, 1238 மற்றும் 1239 என்பனவாகக் குறிப்பிடப்பட்டுள்ள முழு அளவில் சுமார் 1.1275 ஹெக்டயார் விஸ்தீரணமுடைய காணித் துண்டுகள்" என்ற பகுதியை உட்புகுத்துவதன் மூலம் மேற்கூறிய அறிவித்தல் திருத்தப்படுகின்றது.

எம். எஸ். அவன்தி சேனாரத்ன,
பிரதேச செயலாளர்,
நிவித்திகல.

9 - 78

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் அச்சிடப்பட்டது.